வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். RCOP 1/2021

வழக்கு சாட்சி PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுகுமார் | ஜாதி | |
| கணவர்/தந்தை | நமச்சிவாயம் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 59 |

தேதி 24.02.2025

எதிர்மனுதாரர் ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வசல் மனுவின் 2வது மனுதாரர் ஆவேன். முதல் மனுதாரர் எனது மனைவி. 1வது மனுதாரர்காகவும் சேர்த்து நான் எங்களது தரப்பு சாட்சியத்தினை எழுத்துபூர்வமான நிருபண வாக்குமூலமாக இங்கு தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதனை ஒரு பாகமாக ஏற்க வேண்டுகிறேன். எனது தரப்பு கூடுதல் ஆவணமாக 07.09.2022 புல எண். 230 பகுதி மாதவரம் தாலுக்கா, வரைபடம். ம.சா.ஆ. 17 ஆகவும், (எதிர்மனுதாரர் தரப்பில் மாதவரம் நகராட்சியால் அனுமதிக்கப்படாத வரைபடம் என்ற ஆட்சேபணையுடன்) 04.09.2006 G.O. No. 20 அரசாணை நகல் ம.சா.ஆ.18 ஆகவும், 04.01.2018 தமிழ்நாடு அரசு அரசாணை நகல் ம.சா.ஆ.19 ஆகவும் குறியீடு செய்கிறேன். எனது ஆவணத்தினை ஏற்று மனுவின்படி தீர்ப்பளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

மனு சொத்தில் மனுதாரர் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்றால் பல் மருத்துவமனை வைத்து நடத்தி கொண்டிருக்கிறார். தற்போது மனு சொத்தில் மருத்துவமனை தவிர வேறு எதுவும் இல்லை என்றால் ஆமாம். ம.சா.ஆ.17 வரைபடத்தினை தயார் செய்வதற்கு இன்ஜினியருக்கு ஊதியம் அளித்தோம் என்றால் ஆமாம். ம.சா.ஆ.17 மனுவிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. இவ்வசல் மனுவானது தாக்கல் செய்யப்பட்ட காலகட்டத்தில் இம்மனு சொத்தானது இந்த நீதிமன்ற சட்ட (RCOP) வரையரைக்குள் வராது என்றாலும் அதிகமாக நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்பது தெரிந்துகொண்டே அசல் வழக்கினை தாக்கல் செய்யாமல் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த காலத்தில் நீதிமன்ற கட்டணம் அதிகம் செலுத்தவேண்டும் என்பதற்காக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ( மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் நிரூபண வாக்குமூலத்தில் கூறாத விபரங்களை பொறுத்து கேள்வி எழுப்புவதாக கூறி ஆட்சேபணை தெரிவித்தார். மேற்படிஆட்சேபணை பொறுத்து விவாதத்தின்போது முடிவுசெய்ய வேண்டி நீதிமன்றம் ஆட்சேபணையை மட்டும் பதிவு செய்கிறது) ம.சா.ஆ.18, ம.சா.ஆ.19 இரண்டும் மனு சொத்துடன் தொடர்புடைய ஆவணங்கள் அல்ல என்றால் சரியல்ல. மனு சொத்தானது தமிழ்நாடு முனிசிபல் சட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்ட வரையரைக்குள் உள்ள சொத்து இல்லை என்பதால் இந்நீதிமன்றத்தில் மனுவானது தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. அதிக அளவிலான மனு சொத்தானது மாதவரம் முனிசிபாலிட்டி கீழ்தான் வருகிறது. ம.சா.ஆ.18, ம.சா.19 இரண்டு ஆவணங்களும் வரி வசூல் செய்வதற்கு வரையறுக்கப்பட்ட ஆவணமே அன்றி மாதவரம் முனிசிபாலிட்டி எல்லைக்குட்பட்ட சொத்திற்கு உரிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. மேற்படி மனு சொத்தானது

இந்நீதிமன்ற வரையறை எல்லைக்குள் உட்பட்ட சொத்து அல்ல என்பதால் இந்நீதிமன்றத்தால் தீர்மானம் செய்யக்கூடாத மனு என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**